# 5

# லூக்கா நற்செய்தியின் அமைப்பு

உங்கள் வீடு எவ்வகை அமைப்புக்குள் கட்டி எழுப்பப்பட்டுள்ளது என்பதைச் சற்று சிந்தியுங்கள். வீட்டின் நுழைவாயில் அறைகளின் எண்ணிக்கை, அந்த அறைகள் எதற்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. கதவுகள், ஜன்னல்கள் எத்தனை? எப்படி அமைக்கப்பட்டுள்ளது? வீட்டின் அமைப்பைப் பற்றி நல்ல அறிவு உமக்கு இருப்பதால் அவ்வீட்டில் உமக்கு இலகுவாக வாழ முடிகிறது. உமது வீட்டைக் கட்ட ஒருவர் இருந்திருக்கிறார். அவரின் திட்டப்படியே உமது வீடு கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

நூல் அமைப்பைப் பற்றி அறிந்திருந்தால், அதைப் பயன்படுத்துவது இலகுவாக இருந்திருக்கும். ஒரு சிறந்த எழுத்தாளராக தமது நூலை நல் ஒழுங்கமைப்புடன் நற்செய்தியாக அமைத்துக் கொடுத்திருக்கிறார் தூய லூக்கா. எனவே நற்செய்தியை இலகுவாக எழுதவும் வாசிக்கவும் முடிகிறது.

### அர்ப்பணம் (லூக்கா 1 : 1 - 4)

சிறந்த எழுத்தாளரான லூக்கா தன்னுடைய நூலைப் பற்றிய ஒரு அறிமுகத்தை நற்செய்தியின் தொடக்கத்திலே தருகிறார், (லூக்கா 1 : 1). தூய லூக்கா தமது நூலிலே தாம் கண்களால் கண்டவற்றை அல்ல, மாறாக தான் கேட்டு அறிந்தவற்றின் அடிப்படையிலே இந்நற்செய்தியை எழுதியுள்ளார். பெற்றுக் கொண்ட விடயங்களையே நூலில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு தாம் சேகரித்த விடயங்களை ஒழுங்குப்படுத்தி, அவற்றைத் தொகுத்து தந்துள்ளார்.

(லூக்கா 1 : 1 - 4 )

இவர் தனது நூலை 'மாண்புமிகு தியோபில்' என்பவருக்கு அர்ப்பணம் செய்துள்ளார்.(லூக்கா 1 : 1) தூய லூக்கா நற்செய்தியின் இரண்டாவது பாகமாகக் காணப்படுகிற 'திருத்துதர் பணிகள்' என்ற நூலையும் இவருக்கே அர்ப்பணம் செய்கிறார்.

(தி.ப 1 : 1) ‘தியோபில்’ என்ற பெயரின் அர்த்தம் **‘இறைவனின் நண்பன்’** என்பதாகும். ‘மாண்புமிகு’ என்ற சொல்லால் அவர் சமூகத்தில் உயர் அதிகாரியாக இருந்திருக்கிறார் என்பதை அறிய முடியும்.

**இயேசுவின் குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள்** (லூக்கா 1 : 5 - 2 : 52)

இயேசுவின் குழந்தைப் பருவத்தைப் பற்றி தூய மத்தேயு, தூய லூக்கா ஆகிய இரு நற்செய்தியாளர்களும் விபரித்துள்ளனர். லூக்கா சிறப்பான முறையில் நூலை எழுத விரும்பியதால் இயேசுவின் பிறப்பிலிருந்து விபரங்களை ஒழுங்கு படுத்தியிருக்கின்றார். இயேசுவின் பிறப்பு (லூக்கா 2 : 1 - 20) குழந்தை இயேசுவை எருசலேம் தேவாலயத்தில் அர்ப்பணம் செய்தல் (மத்தேயு 2:22-38), இயேசுவின் குழந்தைப்பருவம் (லூக்கா2:39-40) பன்னிரண்டு வயதில் எருசலேம் கோயிலில் பெற்றோரை விட்டுப்பிரிந்து மறுபடியும் கோயிலில் கண்டு பிடிக்கப்பட்டது. (லூக்கா 2 : 41 - 52) ஆகிய நிகழ்வுகளை இங்கு விபரித்துள்ளார்.

**திருப்பணிக்குத் தயார் செய்தல்** (லூக்கா 3 : 1 - 4 : 13)

இயேசுவின் வருகைக்கு மக்களை ஆயத்தப்படுத்துவதே திருமுழுக்கு யோவானின் பணியாக அமைந்தது. இவர் தமது போதனையால், மக்களை மனம் திருப்பி, மனம் திருப்பியதன் அடையாளமாக தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்தார். ஏசாயா இறைவாக்கினர் கூறுவது போல, பாலை வனத்தில் ஒலிக்கும் குரல் திருமுழுக்கு யோவானே, (எசாயா 40 : 3 - 5) முற்காலத்து இறைவாக்கினர் எல்லோரையும் விட இவர் மேன்மையானவராக உள்ளார். திருமுழுக்கு யோவான் இயேசுவின் வருகைக்காகவும், அவருடைய பணிக்காகவும் மக்களது உள்ளங்களை ஆயத்தம் செய்வதையே தமது பணியாகக் கொண்டிருந்தார். இவர் பாலை நிலத்தில் செபத்திலும் தவத்திலும் ஈடுப்பட்டு, கடினமான வாழ்க்கை வழியாக உண்மைக்குச் சான்று பகர்ந்த நேர்மையார் ஆவார்.

**இயேசுவின் கலிலேயப் பணி** (லூக்கா 4 : 14 - 9 : 50)

இயேசு தமது பகிரங்கப் பணியை கலிலேயாவில் ஆரம்பித்தார். அவரது போதனைகளும் குணமளிக்கும் புதுமைகள் சிலவும் இப்பகுதியில் காணப்படுகிறது.

**கலிலேயாவிலிருந்து எருசலேம் நோக்கிப் பயணம்** (லூக்கா 9 : 51 - 19 :27)

கலிலேயாவில் திருப்பணி ஆற்றி முடித்த பின்னர் இயேசு தம் பணியைத் தொடர்ந்து ஆற்ற எருசலேமுக்குச் சென்றார். கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதற்குத் தேவையான அநேக படிப்பினைகள் இப்பகுதியில் காணப்படுகிறது.



**எருசலேமில் திருப்பணி** (லூக்கா 19 : 28 - 21 :38)

இயேசு எருசலேமில் ஆற்றிய திருப்பணிகள் இங்கு விபரிக்கப்பட்டுள்ளது.

i. லூக்கா 19 : 28- 44 **இயேசு எருசலேமில் நுழைதல்.**
இயேசு கழுதையின்மேல் ஏறி அரச வெற்றி ஆர்ப்பரிப்போடு எருசலேமிற்குள் நுழைவது இங்கே விபரிக்கப்படுகிறது.

ii. லூக்கா 19:45-48 இயேசு எருசலேம் ஆலயத்தைத் தூய்மையாக்குதல் இப்பகுதியில் விபரிக்கப்படுகிறது. (இயேசு எருசலேம் ஆலயத்தில் வியாபாரி களை விரட்டிய நிகழ்வு)

iii. லூக்கா 20:1-21:37 இயேசு எருசலேமில் செய்தவைகள், போதித்தவைகள் இங்கே விபரிக்கப்படுகிறது.

**இயேசு துன்புற்று இறந்து உயிர்த்தெழுதலும், விண்ணேற்றமடைதலும்**

(லூக்கா 22 : 1 - 24 :53)

நற்செய்திகளில் மிகவும் முக்கிய பகுதி என்று அழைக்கப்படும் பாஸ்கா மறைபொருள் (இயேசுவின் பாடுகளும், மரணமும், உயிர்த்தெழுதலும்) தொடர்பான நிகழ்வு இங்கே காணப்படுகிறது. எம்மாவுக்குச் செல்லும் வழியில் இயேசு சந்தித்த இரு சீடர்கள் தொடர்பான நிகழ்வும் இங்கே காணப்படுகிறது.

ஒரு செயற்பாடு வெற்றிபெற வேண்டுமானால், தகுந்த ஆயத்தம் தேவையாகின்றது. வெற்றியை அடைவதற்கு நாம் ஒழுங்கு முறையானதொரு திட்டத்தைப் பின்பற்ற வேண்டும்.

**செயற்பாடு**

1. லூக்கா நற்செய்தியின் அமைப்பில் இருக்கும் முக்கிய பகுதிகளைக் குறிப்பிடுக.

2. பாலஸ்தீனா வரைபடத்தை வரைந்து முக்கியமான ஐந்து இடங்களை குறிப்பிடுக.

**வாழ்க்கைக்கு**

சீரான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள ஒழுங்கு முறை அவசியம் என்பதை விளங்கிக் கொண்டு, அவ் ஒழுங்கு முறைக்கேற்ப எமது வாழ்க்கையை அமைத்துக் கொள்வோம்.